சுருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – 2018–19–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல் மற்றும் உதவிப் பேராசிரியர் பணியிடங்களை தோற்றுவித்தல் – ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.120

நாள் 22.06.2018.
விளம்பி, ஆனி–08,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

படிக்கப்பட்டவை:–

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 13517/க்யூ3/2018, நாள். 07.06.2018

---------

ஆணை:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மற்றவற்றிற்கிடையே கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்:–

> ''2011–12ஆம் கல்வியாண்டு முதல் 2017–18ஆம் கல்வியாண்டு வரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1232 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 2018–19ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப் பிரிவுகள் (68 இளங்கலை, 60 முதுகலை, 136 ஆராய்ச்சி) அறிமுகப்படுத்தப்படும். இப்பாடப்பிரிவுகளை கையாளுவதற்கு 683 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கென அரசுக்கு தொடரும் செலவினமாக 68 கோடியே 46 லட்சம் ரூபாய் ஏற்படும். இப்பாடப் பிரிவுகளின் தேவைக்கென 324 வகுப்பறை கட்டடங்கள், 50 ஆய்வகங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகள் 62 கோடியே 75 லட்சம் ரூபாயில் அமைக்கப்படும்.''

2. அதற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் புதிய பாடப்பிரிவுகள் மற்றும் அதற்கான பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்த கருத்துருவில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

2018–19ஆம் கல்வியாண்டில் 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 75 இளநிலை, 53 முதுநிலை, 65 எம்.பில் மற்றும் 71 பி.எச்.டி. ஆகமொத்தம் 264 புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு 2018–19ஆம் கல்வியாண்டிற்கு 270 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும், 2019–20ஆம் கல்வியாண்டிற்கு 273 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும், 2020–21ஆம் கல்வியாண்டிற்கு 150 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும் ஆக மொத்தம் 693 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை புதியதாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும், 2018–19ஆம் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதால் முதலாமாண்டிற்கு இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு 270 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.27,41,26,680/– (ரூபாய் இருபத்து ஏழு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்)

முதலாமாண்டுக்கு தொடர் செலவினமாகும், 2019–20ஆம் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதால் இரண்டாமாண்டிற்கு இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு 273 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.27,71,72,532/– (ரூபாய் இருபத்து ஏழு கோடியே எழுபத்தொரு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்து இரண்டு மட்டும்) இரண்டாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் மற்றும் 2020–21ஆம் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதால் மூன்றாமாண்டிற்கு இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு 150 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.15,22,92,600/– (ரூபாய் பதினைந்து கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்) மூன்றாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் என்றும் எனவே, இப்புதிய பாடப்பிரிவுகள் துவங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்கென உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் உரிய ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று 2018–19ஆம் கல்வியாண்டிலிருந்து இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 75 இளங்கலை, 53 முதுகலை, 65 எம்.பில் மற்றும் 71 பி.எச்.டி. ஆகமொத்தம் 264 புதிய பாடப்பிரிவுகளை துவங்குவதற்கும் மற்றும் இப்பாடப்பிரிவுகளை கையாளுவதற்கு மொழிப்பாடங்களுக்கென 88 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும் மற்ற பாடப்பிரிவுகளுக்கென 182 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும் ஆகமொத்தம் 270 உதவிப்பேராசிரியர் பணியிடங்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது:–

(1) தமிழ் பாடப்பிரிவில் உபரியாக உள்ள 4 பணியிடங்கள் (கும்பகோணம் ஆடவர் கல்லூரியில் உபரியாக உள்ள 2 பணியிடங்கள் மற்றும் விழுப்புரம் அரசு கலைக் கல்லூரியில் உபரியாக உள்ள 2 பணியிடங்கள்) மற்றும் ஆங்கில பாடப்பிரிவில் உபரியாக உள்ள 6 பணியிடங்கள் (கும்பகோணம் ஆடவர் கல்லூரியில் உபரியாக உள்ள 1 பணியிடம் மற்றும் புதுக்கோட்டை அரசு கலைக் கல்லூரியில் உபரியாக உள்ள 5 பணியிடங்கள்) பணிநிரவல் (Redeployment) அடிப்படையில் நிரப்பப்படவேண்டும். மற்ற பாடப்பிரிவுகளில் உபரி பணியிடங்கள் இருந்தால் இந்தமுறை பின்பற்றப்பட வேண்டும். அதன்படி தமிழ் பாடப்பிரிவுகளுக்கு 40 (44–4 உபரி) பணியிடங்களும் ஆங்கிலப் பாடப்பிரிவுகளுக்கு 38 (44–6 உபரி) பணியிடங்களும் மற்ற பாடப்பிரிவுகளுக்கு 182 பணியிடங்களும் ஆக மொத்தம் 260 புதிய பணியிடங்களுக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(2) மேற்கண்ட 260 புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்காக எதிர்பார்க்கப்படும் நிதிச் செலவினம் ஆண்டொன்றிற்கு ரூ.26,39,73,840/– ஒப்பளிக்கப்படுகிறது.

(3) 2018–19 முதல் 2020–21 வரை உதவிபேராசிரியர் பணியிடங்களை உருவாக்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**(i) <u>ஆடவர் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணக்கு தலைப்பு</u>**

"2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் –103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள்–AA கலைக்கல்லூரிகள் (ஆடவர்) – 01 சம்பளங்கள்" (து.தொ.கு.2202 – 03 – 103 AA –0109)

**(ii) <u>மகளிர் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணக்கு தலைப்பு</u>**

"2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள்– AB கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 01 சம்பளங்கள்" (து.தொ.கு.2202 – 03 – 103 AB –0107)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுத் துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ" வின்படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018–19ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் கோப்பு எண்.32790/கல்வி–I/2018, நாள் 22.06.2018, அ.சா.எண்.32979/மைமஆபி/2018, நாள்.22.06.2018 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.490 (நானூற்று தொண்ணூறு) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்கள் (கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
சார்ந்த கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–1/35/15.

சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–15.
சார்ந்த  கருவூல அலுவலர்.
நகல்:–
முதலமைச்சர்  அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை. சென்னை–9
நிதித் (கல்வி–I / வ.செ.பொது–I / வ.செ.பொது–II / சி.எம்.பி.சி.) துறை, சென்னை–9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

22/6/18
பிரிவு அலுவலர்

இணைப்பு

| அரசாணை (நிலை) எண்.120, உயர்கல்வித்(ஜி1)துறை, நாள்.22.06.2018 | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எ ண் | கல்லூரியின் பெயர் | | தொடங்கப்பட வேண்டிய புதிய பாடப்பிரிவுகள் | | | தேவைப்படும் ஆசிரியர்கள் | | | மொழிப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் | | மொத்தம் |
| | | | இளநிலை | | முதுநிலை | I | II | III | தமிழ் | ஆங்கிலம் | |
| 1 | காமராஜர் அரசு கலைக் கல்லூரி, சுரண்டை – 627 859. | | | 1 | எம்.ஏ ஆங்கிலம் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்.ஸி. வேதியியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.எஸ்.ஸி. நுண்ணுயிரியல் | 2 | 3 | | | | 5 |
| 2 | அரசு கலைக் கல்லூாி (து) கோவை–18. | | | 1 | எம்.பில் கணினிபயன்பாட்டியல் (FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி. கணினி பயன்பாட்டியல் (FT/PT.) | | | | | | |
| 3 | பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி (து) திருச்சி–23. | | | 1 | பி.எச்.டி. கணினி அறிவியல் (FT/PT.) | | | | | | |
| | | | | 2 | எம்.எஸ்.ஸி உயிர் வேதியியல் | 2 | 3 | | | | 5 |
| 4 | குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர். | | | 1 | எம்.எஸ்.ஸி. இயற்பியல் | 2 | 3 | | | | 5 |
| 5 | வ.செ. சிவ. அரசு கலைக் கல்லூரி, பூலாங்குறிச்சி–630 405 | 1 | பி.ஏ.தமிழ் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. இயற்பியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 3 | பி.எஸ்.ஸி. கணிதவியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்.ஸி. வேதியியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.எஸ்.ஸி. கணினி அறிவியல் | 2 | 3 | | | | 5 |
| 6 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உத்திரமேரூர் | 1 | பி.எஸ்.ஸி. இயற்பியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்லடம். | 1 | பி.எஸ்.ஸி.ஆடை வடிவமைப்பியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | | | 5 |
| | | | பி.எஸ்.ஸி.வேதியியலுக்கு, இயற்பியல் | | | 1 | | | | | 1 |
| | | 3 | பி.காம் வங்கி மற்றும் காப்பீட்டியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| 8 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,வேப்பந்தட்டை, | 1 | பி.எஸ்.ஸி. இயற்பியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.ஏ தமிழ் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்.ஸி. கணினி அறிவியல் | 2 | 3 | | | | 5 |
| 9 | முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி(த) வேலூர் | | | 1 | எம்.எஸ்.ஸி. (Foods and Nutrition) | 2 | 3 | | | | 5 |
| 10 | மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (த), தஞ்சாவூர். | | | 1 | பி.எச்டி உயிர் வேதியியல் (FT/PT) | | | | | | |
| 11 | ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி–8. | 1 | பி.எச்.ஆர்.டி | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்,டபிள்யூ | 2 | 2 | | | | 4 |
| 12 | அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி , குடியேற்றம். | | | 1 | எம்.ஏ வரலாறு | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.பில். தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.பில். ஆங்கிலம் (FT/PT.) | | | | | | |
| | | | | 4 | எம்.பில். பொருளியல்(FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.பில். வணிகவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 6 | எம்.பில். வேதியியல்(FT/PT) | | | | | | |
| | | | | 7 | எம்.பில். இயற்பியல்(FT/PT) | | | | | | |
| | | | | 8 | எம்.பில். தாவரவியல்(FT/PT) | | | | | | |
| | | | | 9 | பி.எச்டி. தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 10 | பி.எச்டி. ஆங்கிலம் (FT/PT) | | | | | | |
| | | | | 11 | பி.எச்டி. பொருளியல்(FT/PT) | | | | | | |
| | | | | 12 | பி.எச்டி. வணிகவியல்(FT/PT) | | | | | | |
| | | | | 13 | பி.எச்டி. வேதியியல்(FT/PT) | | | | | | |
| | | | | 14 | பி.எச்டி. இயற்பியல்(FT/PT) | | | | | | |
| | | | | 15 | பி.எச்டி. தாவரவியல்( FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூாி, வாலாஜாபேட்டை. | | | 1 | எம்.எஸ்.ஸி. இயற்பியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.பில் கணிதவியல்(FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.பில் தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.பில் வணிகவியல்(FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.பில் ஆங்கிலம்(FT/PT) | | | | | | |
| 14 | ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூாி (கு), மதுரை–2 | 1 | பி.சி.ஏ(கணினி பயன்பாட்டியல்) | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. மனையியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.பில். கணினிஅறிவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 3 | பி.எச்டி கணினிஅறிவியல் (FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | நா.க.இரா. அரசு மகளிர் கலைக் கல்லூரி, நாமக்கல் | | | | | | | | | | |
| | | | | 1 | எம்.காம் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி நுண்ணுயிரியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.எஸ்ஸி., ஊட்டச்சத்து மற்றும் உணவு கட்டுப்பாட்டியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 4 | எம்.பில். தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.பில். பொருளியல்( FT/PT) | | | | | | |
| | | | | 6 | எம்.பில். வரலாறு(FT/PT) | | | | | | |
| | | | | 7 | எம்.பில். விலங்கியல்( FT/PT) | | | | | | |
| | | | | 8 | எம்.பில். கணிதவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 9 | எம்.பில். இயற்பியல்( FT/PT) | | | | | | |
| | | | | 10 | எம்.பில். கணினி அறிவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 11 | எம்.பில். வேதியியல்( FT/PT) | | | | | | |
| | | | | 12 | பி.எச்.டி. தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 13 | பி.எச்.டி. பொருளியல்( FT/PT) | | | | | | |
| | | | | 14 | பி.எச்.டி. வரலாறு(FT/PT) | | | | | | |
| | | | | 15 | பி.எச்.டி. விலங்கியல்( FT/PT) | | | | | | |
| | | | | 16 | பி.எச்.டி. கணிதவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 17 | பி.எச்.டி. இயற்பியல்( FT/PT) | | | | | | |
| | | | | 18 | பி.எச்.டி. கணினி அறிவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 19 | பி.எச்.டி. வேதியியல்( FT/PT) | | | | | | |
| 16 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசினர் கலைக் கல்லூரி, திருத்தணி. | | | 1 | எம்.பில். தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி. தமிழ் (FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | பெரியார் கலைக் கல்லூரி கடலூர்–607 001. | | | 1 | எம்.ஏ. அரசியல் சார் அறிவியல் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. புள்ளியியல் | 2 | 2 | | | | 4 |
| | | | | 3 | எம்.பில் வேதியியல் (FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.பில் ஆங்கிலம் (FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.பில் வரலாறு (FT/PT) | | | | | | |
| | | | | 6 | எம்.பில் கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 7 | பி.எச்.டி. ஆங்கிலம் (FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி.வேதியியல் (FT/PT) | | | | | | |
| | | | | 9 | பி.எச்.டி கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 10 | பி.எச்.டி கணினி அறிவியல் (FT/PT) | | | | | | |
| 18 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணல்மேடு. | 1 | பி..ஏ.,வரலாறு | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி இயற்பியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 3 | பி.எஸ்.ஸி வேதியியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலை கல்லூரி, திண்டிவனம். | 1 | பி.பி.ஏ | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி வேதியியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.பில். தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 2 | எம்.பில். தாவரவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.பில். கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.பில். வேதியியல் (FT/PT) | | | | | | |
| | | | | 5 | பி.எச்.டி.தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 6 | பி.எச்.டி.தாவரவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 7 | பி.எச்.டி.கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி.வேதியியல் (FT/PT) | | | | | | |
| 20 | அரசினர் கலைக் கல்லூரி (சு), கும்பகோணம். | 1 | பி.எஸ்.ஸி. கணினி அறிவியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| 21 | தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை. | | | 1 | பி.எச்.டி பொருளியல் (FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி இயற்பியல் (FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22 | அரசு மகளிர் கலைக் கல்லூரி, சேலம் .8 | | | 1 | எம்.ஏ. பொருளியல் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி.நுண்ணுயிரியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில். கணினி அறிவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில். கணிதவியல் (FT/PT) | | | | | | |
| 23 | மா. மன்னர் கல்லூரி (த) புதுக்கோட்டை | 1 | பி.லிட் (தமிழ்) | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி விலங்கியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | பி.எச்டி. வேதியியல்(FT/PT) | | | | | | |
| 24 | அரசு மகளிர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி. | 1 | பி.ஏ.பொருளியல் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | 2 | பி.ஏ வரலாறு | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | 3 | பி.எஸ்.ஸி. புள்ளியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 4 | பி.எஸ்.ஸி. இயற்பியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.காம் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. வேதியியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில் கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில் வேதியியல் (FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.ஃபில் வணிகவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 6 | பி.எச்.டி. வேதியியல் (FT/PT) | | | | | | |
| | | | | 7 | பி.எச்.டி.கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி.வணிகவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 9 | பி.எச்.டி.உயிர் வேதியியல் (FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25 | அரசு மகளிர் கலைக் கல்லூரி (த) , புதுக்கோட்டை. | | | 1 | எம்.ஃபில் பொருளியல்( FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி பொருளியல்(FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.ஃபில் தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 4 | பி.எச்.டி தமிழ்(FT/PT) | | | | | | |
| 26 | அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி. | 1 | பி.எஸ்.ஸி வேதியியல்(த/வ) | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.பில் வேதியியல் (FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி வேதியியல் (FT/PT) | | | | | | |
| 27 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோவில். | 1 | பி.எஸ்ஸி. இயற்பியல். | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 2 | பி.எஸ்ஸி. புள்ளியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 3 | பி..ஏ.வரலாறு | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | 4 | பி.பி.ஏ. | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| 28 | அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம். | 1 | பி.எஸ்ஸி. புள்ளியியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| 29 | எம்.வி.எம். அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல். | 1 | பிபிஏ | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. விலங்கியல்(ஆ.வ) | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. இயற்பியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில் கணிதவியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 4 | பி.எச்.டி கணிதவியல்(FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30 | டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரி, வியாசர்பாடி–39. | 1 | பி.ஏ. தமிழ் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| 31 | பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலக்கோடு. | 1 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. இயற்பியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 3 | பி.எஸ்.ஸி. விலங்கியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 4 | பி.எஸ்.ஸி. தாவரவியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 32 | அரசு கலைக் கல்லூாி, தருமபுாி. | 1 | பி.எஸ்.ஸி. ஊளவியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.காம்(கணினி பயன்பாடு) | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. மின்னனுவியல் மற்றும் தொடா்பியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில் வணிகவியல் (கணினி பயன்பாடு)(FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில் இயற்பியல்(FT) | | | | | | |
| | | | | 5 | பி.எச்.டி. கூட்டுறவியல்(FT/PT) | | | | | | |
| | | | | 6 | பி.எச்.டி. வரலாறு(FT/PT) | | | | | | |
| | | | | 7 | பி.எச்.டி. இயற்பியல்(FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி.வணிகவியல்(கணினி பயன்பாடு)(FT/PT) | | | | | | |
| 33 | திருவள்ளுவா் அரசு கலைக் கல்லூாி, இராசிபுரம். | 1 | பி.ஏ பொது நிா்வாகம் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | | | 1 | எம்.ஏ பொருளியல் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | பி.எச்.டி.கணினி அறிவியல்(FT/PT) | | | | | | |
| | | | | 3 | பி.எச்.டி.அரசியல் சாா் அறிவியல்(FT/PT) | | | | | | |
| 34 | அரசினா் ஆடவா் கலைக் கல்லூாி(து), நந்தனம், சென்னை–35 | | | 1 | பி.எச்.டி தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி வரலாறு(FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 35 | அரசு மகளிர்கலை மற்றும் அறிவியல் கல்லூரி,பருகூர். | 1 | பி.காம்(A&F) | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி.மின்னனுவியல் மற்றும் தொடர்பியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.ஃபில் கணிதவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 3 | பி.எச்.டி ஆங்கிலம்( FT/PT) | | | | | | |
| 36 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம். | 1 | பி.ஏ பொருளியல் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. கணினி அறிவியல். | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.ஃபில் தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.ஃபில் ஆங்கிலம்( FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில் வணிகவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 5 | பி.எச்.டி.தமிழ்(FT/PT) | | | | | | |
| | | | | 6 | பி.எச்.டி.ஆங்கிலம்( FT/PT) | | | | | | |
| | | | | 7 | பி.எச்.டி.வணிகவியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி.வணிக நிர்வாகம்( FT/PT) | | | | | | |
| | | | | 9 | பி.எச்.டி கணிதவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 10 | பி.எச்.டி. கணினி அறிவியல்(FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 37 | இரா.வே.அரசு கலைக் கல்லூரி, செங்கல்பட்டு. | 1 | பிபிஏ | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.ஃபில் வணிகவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 2 | எம்.ஃபில் வரலாறு(FT/PT) | | | | | | |
| | | | | 3 | பி.எச்.டி. வரலாறு ( FT/PT) | | | | | | |
| 38 | அரசு மகளிர் கலைக் கல்லூரி,(கு) கும்பகோணம். | 1 | பி.எஸ்.ஸி. தாவரவியல் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | | | 1 | எம்.ஃபில் தமிழ் ( FT/PT) | | | | | | |
| | | | | 2 | எம்.ஃபில் விலங்கியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.ஃபில் இயற்பியல் ( FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 39 | அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை. | 1 | பி.ஏ பொருளியல் (த/வ) | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. புவியியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. வேதியியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.எஸ்ஸி., ஊட்டச்சத்து மற்றும் உணவுகட்டுப்பாட்டியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 4 | எம்.ஃபில் ஆங்கிலம் ( FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.ஃபில் பொருளியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 6 | எம்.ஃபில் வணிகவியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 7 | எம்.ஃபில் வணிக நிர்வாகவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி.ஆங்கிலம் ( FT/PT) | | | | | | |
| | | | | 9 | பி.எச்.டி.பொருளியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 10 | பி.எச்.டி.வணிகவியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 11 | பி.எச்.டி.வேதியியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 12 | பி.எச்.டி.கணினி அறிவியல்(FT/PT) | | | | | | |
| 40 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,பெரும்பாக்கம். | 1 | பி.எஸ்.ஸி. இயற்பியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 3 | பி.சி.ஏ | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 4 | பி.காம் (நிறுமச் செயலாண்மை) | | | 1 | 2 | 2 | | 1 | 6 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 41 | அரசு கலைக் கல்லூரி குளித்தலை. | | | 1 | எம்.காம் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.ஃபில் ஆங்கிலம்( FT/PT) | | | | | | |
| | | | | 3 | எம்.ஃபில் வணிகவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில் இயற்பியல்( FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.ஃபில் கணிதவியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 6 | பி.எச்.டி. வணிகவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 7 | பி.எச்.டி. இயற்பியல் ( FT/PT) | | | | | | |
| | | | | 8 | பி.எச்.டி. கணினி அறிவியல் (FT/PT) | | | | | | |
| | | | | 9 | பி.எச்.டி.கணிதவியல் ( FT/PT) | | | | | | |
| 42 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,சத்தியமங்கலம். | 1 | பி.எஸ்.ஸி. காட்சி தொடர்பியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 2 | பி.காம் கூடுதல் பிரிவு | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 3 | பிசிஏ | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| 43 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல். | | | 1 | எம்.எஸ்ஸி. விலங்கியல். | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. கணினி அறிவியல். | 2 | 3 | | | | 5 |
| 44 | அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி. | 1 | பி.ஏ பொருளியல் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| 45 | மன்னர் துரைசிங்கம் அரசுக் கலைக் கல்லூரி சிவகங்கை. | 1 | பிபிஏ | | | 1 | 2 | 2 | 1 | | 6 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 46 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை. | 1 | பி.காம் (த/வ) | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. காட்சி தொடர்பியல் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | | | 1 | எம்.ஏ தமிழ் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. கணிதம். | 2 | 2 | | | | 4 |
| 47 | அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரியமங்கலம். | 1 | பிசிஏ | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. ஊட்டச்சத்துவியல் மற்றும் உணவு கட்டுப்பாட்டியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. இயற்பியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. வேதியியல் | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில் வணிகவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில் கணிதவியல்( FT/PT) | | | | | | |
| | | | | 5 | எம்.ஃபில் கணினி அறிவியல்(FT/PT) | | | | | | |
| 48 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராதாகிருஷ்ணன் நகர். சென்னை | 1 | பி.ஏ தமிழ் | | | 1 | 1 | 2 | 1 | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. கணிதவியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 3 | பி.எஸ்.ஸி. கணினி அறிவியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.ஏ பொருளியல் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.காம் | 2 | 2 | | | | 4 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 49 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒசூர். | 1 | பி.காம்(கணினி பயன்பாடு) (ஆ/வ) | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. புள்ளியியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. கணிதம். | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. கணினி அறிவியல். | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில் தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 4 | எம்.ஃபில் ஆங்கிலம்( FT/PT) | | | | | | |
| | | | | 5 | பி.எச்.டி. தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 6 | பி.எச்.டி. ஆங்கிலம் ( FT/PT) | | | | | | |
| 50 | திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம் | | | 1 | எம்.எஸ்ஸி. தாவரவியல். | 2 | 3 | | | | 5 |
| | | | | 2 | பி.எச்.டி. விலங்கியல் ( FT/PT) | | | | | | |
| 51 | அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை. | 1 | பி.காம் (கணினி பயன்பாடு) | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | எம்.எஸ்ஸி. விலங்கியல் | 2 | 3 | | | | 5 |
| 52 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டுப்பாளையம். | 1 | பி.ஏ சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. கணினி அறிவியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 53 | டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம். | 1 | பி.எஸ்.ஸி. வேதியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. இயற்பியல்(ஆ/வ) | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 3 | பி.எஸ்.ஸி. புள்ளியியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 4 | பி.எஸ்.டபிள்யூ | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| 54 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம். | 1 | பி.எஸ்.ஸி. விலங்கியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| 55 | அரசு கலைக் கல்லூரி, மேலூர். | | | 1 | எம்.ஃபில் தமிழ் (FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி. தமிழ் (FT/PT) | | | | | | |
| 56 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கறம்பங்குடி | | | 1 | எம்.காம் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.ஏ.தமிழ் | 2 | 2 | | | | 4 |
| 57 | அரசு கலைக் கல்லூரி, அரியலூர். | 1 | பி.எஸ்.ஸி. சுற்றுச்சூழல் அறிவியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| 58 | அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு. | 1 | பி.காம்(A&F) | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | | | 1 | பி.எச்.டி. ஆங்கிலம் ( FT/PT) | | | | | | |
| | | | | 2 | பி.எச்.டி. விலங்கியல் ( FT/PT) | | | | | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 59 | சிக்காண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர். | 1 | பி.ஏ பொருளியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | | | 1 | எம்.ஏ பொருளியல் | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.ஏ தமிழ் | 2 | 2 | | | | 4 |
| | | | | | | | | | | | |
| 60 | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி. | 1 | பி.ஏ பொருளியல் | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| | | 2 | பி.எஸ்.ஸி. தாவரவியல் | | | 1 | 2 | 2 | 1 | | 6 |
| | | 3 | பி.பி.ஏ | | | 1 | 2 | 2 | | 1 | 6 |
| 61 | அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம். | | | 1 | எம்.காம் (கணினி பயன்பாடு) | 2 | 2 | | | | 4 |
| | | | | 2 | எம்.எஸ்ஸி. கணினி அறிவியல். | 2 | 3 | | | | 5 |
| | | | | 3 | எம்.ஃபில் ஆங்கிலம் ( FT/PT) | | | | | | |
| | | | | 4 | பி.எச்.டி. ஆங்கிலம் ( FT/PT) | | | | | | |
| | | | | | முதன்மைப் பாடம் + துணைப்பாடம் | 182 | 273 | 150 | 44 | 44 | 693 |
| | | | | | மொழிப்பாடம் (தமிழ்+ஆங்கிலம்) | 88 (44+ 44) | | | | | |
| | | | | | மொத்தம் | 270 | 273 | 150 | | | 693 |

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

